# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2005 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, இலங்கைப் புகையிரத அதிகாரசபை (நீக்கச்) சட்டம்

---

*(2005 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 10 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2005, பெப்புருவரி மாதம் 11 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்*

**விலை : ரூபா 4.75** **தபாற் செலவு : ரூபா 5.00**

# 2005 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, இலங்கைப் புகையிரத அதிகாரசபை (நீக்கச்) சட்டம்

[2005 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 10 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

**1993 ஆம் ஆண்டின் 60 ஆம் இலக்க, இலங்கைப் புகையிரத அதிகாரசபைச் சட்டத்தை நீக்குவதற்கும் அத்துடன் அதனோடு தொடர்புடைய அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம் 2005 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, இலங்கைப் புகையிரத அதிகாரசபை (நீக்கச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

1993 ஆம் ஆண்டின் 60 ஆம் இலக்கச் சட்டத்தை நீக்குதல்.

**2.** ஆயிரத்துத் தொளாயிரத்து தொண்ணூற்றி மூன்றாம் ஆண்டின் 60 ஆம் இலக்க இலங்கைப் புகையிரத அதிகாரசபைச் சட்டம் இத்தால் நீக்கப்படுகின்றது.

நிலைபெயர்கால ஏற்பாடுகள்.

**3.** (1) 1993 ஆம் ஆண்டின் 60 ஆம் இலக்க இலங்கைப் புகையிரத அதிகார சபைச் சட்டம், 2 ஆம் பிரிவினால் நீக்கப்பட்டமை எவ்வாறிருப் பினும், இச்சட்டம் தொடங்கும் தேதியன்று, 1993 ஆம் ஆண்டின் 60 ஆம் இலக்க, புகையிரத அதிகாரசபைச் சட்டத்தால் தாபிக்கப் பட்ட இலங்கைப் புகையிரத அதிகாரசபையின் வரவில் இருக்கின்ற எல்லாப் பணங்களும், அத்தகைய திகதியிலிருந்து திரட்டுநிதியத் துக்கு கைமாற்றப்படுதல் வேண்டும்.

(2) (அ) நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைப் புகையிரத அதிகாரசபையினால் அல்லது அதற்கு எதிராக ஏதேனும் நீதிமன்றம் அல்லது நியாயசபையில் தொடரப் பட்டதும் இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னைய தினத்தில் முடிவுறாதுள்ளதுமான எல்லா வழக்கு நடவடிக்கைகளும், இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து புகையிரதத் திணைக்களத்தால் அல்லது அதற்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு நடவடிக்கைகளாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், இதற்கிணங்கக் கொண்டுநடாத்தப்படுதலும் வேண்டும்.

(ஆ) இலங்கைப் புகையிரத அதிகாரசபை சார்பில் அல்லது அதற்கு எதிராக ஏதேனும் நீதிமன்றத்தால் அல்லது நியாயசபையால் பதியப்பட்ட எல்லாத் தீர்ப்புக்களும், தீர்வைகளும் அல்லது கட்டளைகளும், இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து, புகையிரதத் திணைக்களம் சார்பான அல்லது அதற்கெதிரான தீர்ப்புக்கள், தீர்வைகள் அல்லது கட்டளைகளாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அதற்கிணங்க செயற்படுத்தப்படுதலும் வேண்டும்.

2 –H 22935 – 1,250 (2004/11)

*1979 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, அரச காணிகள் (ஆட்சி மீளப்பெறுதல்) சட்டம் மற்றும் புகையிரதச் சேவைக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 200) செயற்பாட்டிலிருப் பதாகக் கருதப்படுதல்.*

**4.** இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதற்குப் பின்னரும் புகையிரத சேவைக் கட்டளைச்சட்டமும் (அத்தியாயம் 200) 1979 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, அரச காணிகள் (ஆட்சி மீளப் பெறுதல்) சட்டமும் எல்லா நோக்கங்களுக்காகவும் அவை 1993 ஆம் ஆண்டின் 60 ஆம் இலக்க, இலங்கைப் புகையிரத அதிகாரசபைச் சட்டத்தால் திருத்தப் பட்டிருக்கவில்லையென்றாற் போன்று செயற்பாட்டில் இருப்பதாகவும், இருந்து வந்ததாகவும் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் புகையிரதச் சேவை விடயத்தை ஆளும் சட்டமாகத் தொடர்ந்திருத் தலும் வேண்டும்.

*1993ஆம் ஆண்டின் 60 ஆம் இலக்க, இலங்கைப் புகையிரத அதிகாரசபைச் சட்டத்தின் 1 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப் பட்ட கட்டளையின் (1) ஆம் பந்தியை இல்லாதொழித்தல்.*

**5.** ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றி மூன்றாம் ஆண்டின் 60 ஆம் இலக்க, இலங்கைப் புகையிரத அதிகாரசபைச் சட்டத்தின் 1 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்டதும் 2003.07.23 ஆம் தேதிய 1298/22 ஆம் இலக்க, அதிவிசேட கசெற்றில் வெளியிடப் பட்டதுமான கட்டளையின் (1) ஆம் பந்தி இத்தால் இல்லாதொழிக் கப்படுகின்றது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**6.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*